REGD. No. M. 6311 ★ தனி இதழ் 1 அணு ★ இலங்கையில் 10 சதம் ★ PHONE:

நம் நாடு

தி.மு.க.தின இதழ் ஆசிரியர்..அண்ணதுரை

The "Nam Nadu" A Tamil Daily. ★ The Official Organ Of The D.P.F.

மலர் 2] சென்னை: கார்த்திகை 23உ புதன் (8—12—54) ★ ★ வெளியூர்: கார்த்திகை 24உ வியாழன் (9—12—54) [இதழ் 152

வடவர் வாணிபம் செழிக்க!

கப்பல்கள் வாங்க மட்டும் ரூ. 750 லட்சம் கடன் உதவி

புதுடில்லி, டிச. 7—

கடலோர வர்த்தகத்திற்கு உதவும் வகையில் புதிய கப்பல்கள் வாங்குவதற்காக இந்திய கப்பல் கம்பெனிகளுக்கு 749 43 லட்சம் ரூபாய் கடன் தந்திருப்பதாக, உதவி ரயில்வே மந்திரி ஓ. வி. அழகேசன் மக்கள் சபையில் தெரிவித்திருக்கிறார்.

ஐந்தாண்டுத் திட்டத்தில் கப்பல்கள் வாங்குவதற்காக, 100·11 லட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டிருப்பதாகவும் அவர் கூறினர்.

"கலையினைக் கொலை செய்யும் கொடுவாள்"

'நாடகச் சட்ட மசோதா காமராசர் ஆட்சியைக் கவிழ்க்கும் சூழ்ச்சி'

சட்டசபையில் உறுப்பினர்களின் பலத்த எதிர்ப்பு

" நாடகக் கலையினைக் கொல்ல கொடுவாள் ஒன்றை சர்க்கார் கையில் கொடுப்பதே நாடகச் சட்ட மசோதாவின் நோக்கம்" என்றும், " ஆச்சாரியார், நிதி அமைச்சர் போன்ருேரின் பிரச்சாரத்திற்குப் பின்னர், புராண திரைப்படங்கள் மடிந்துபோவது ஏன் என்றும் சர்க்கார் சிந்திக்க வேண்டும்" என்பதை எடுத்துக்காட்டி, " இதன் மூலம் காமராசரின் ஆட்சிக்கு ஆபத்து ஏற்படும் " என்பதையும் இன்று சென்னை சட்டசபையில் நாடகச் சட்ட மசோதாவை எதிர்த்துப் பேசிய பலர் குறிப்பிட்டு, மசோதாவைக் கைவிடுமாறு கேட்டுக்கொண்டனர்.

சென்னை, டிச. 7—

சென்னை சர்க்கார் கொண்டு வந்திருக்கும் நாடக சட்ட மசோதாவைப் பொது மக்களின் கருத்தறிய அனுப்பவேண்டும் என்று, இன்று சென்னை சட்ட சபையில் திராவிட பார்லிமெண்டரி கட்சியின் தலைவர் எஸ். சுயம்பிரகாசம் திருத்தமொன்றை பிரரேபித்தார். தோழர் தெய்வசிகாமணி திருத்தத்தை வழிமொழிந்தார்.

இந்த மசோதாவை ஒரு ஆண்டு காலத்திற்கு ஒத்திப் போட வேண்டுமென்று, தோழர் சி. நாராயண நம்பியார் திருத்தம் ஒன்றை பிரரேபித்தார்.

நாடக மசோதாவை தனிக் குழுவின் பரிசீலனைக்கு அனுப்ப வேண்டும் என்ற நிதி அமைச்சரின் பிரரேபணைகளும் திருத்தங்களும் விவாதத்திற்கு வைக்கப்பட்டது.

இந்நிலையில் எதிர்க்கட்சித் தலைவர் இராமமூர்த்தி 'இந்த மசோதா அரசியல் சட்டத்திற்கு முரணனது,' என்று ஒழுங்குப் பிரச்சினை ஒன்றை எழுப்பினர்.

தோழர் நாராயண குருப், 'இது போன்ற சட்டங்களை பாராளுமன்றமே இயற்ற முடியும்,' என்று கூறினர்.

இந்த ஒழுங்குப் பிரச்சினைகளை சபைத் தலைவர் நிராகரித்தார்.

(4-ம் பக்கம் பார்க்க)

தூக்கிலிடப்பட்டனர்

கெய்ரோ, டிச. 7—

எகிப்திய சர்க்காரைக் கவிழ்க்க சதி செய்ததாகக் குற்றம் சாட்டப்பட்டு, மரண தண்டனை விதிக்கப்பட்ட முஸ்லிம் சகோதரத்துவ நிறுவனத்தைச் சேர்ந்த ஆறு பேர்கள் இன்று தூக்கிலிடப்பட்டு கொல்லப்பட்டனராம்.

எகிப்தியப் பிரதமர் கர்னல் அப்டெல் நாசரை கடந்த அக்டோபரில் வெடிகுண்டு வீசி கொல்ல முயன்ற அப்துல்லத்தீப் என்ற இளைஞரும் தூக்கிலிடப்பட்டோரில் ஒருவராகும்.

தடையை மீறுவார்?

"ஜனநாயகத்தில் போலீஸ் துப்பாக்கிப் பிரயோகம்" என்பது குறித்து பி.-சோ. தலைவர் டாக்டர் ராம் மனேகர் லோகியா வரும் வியாழனன்று இங்கு பேசவிருக்கிருர். அதற்கு போலீஸ் அனுமதி கிடைக்காவிடில், அவர் தடையை மீறி கூட்டத்தில் பேசுவார் எனக் கூறப்படுகிறது.

டிசம்பர் 10-ந் தேதி முதல் நடைபெறவிருக்கும் பாங்கி ஊழியர் வேலை நிறுத்தத்தை ஒட்டி ஐதராபாத் நகரில் 1 வாரத்திற்கு தடை விதிக்கப்பட்டுள்ளதாம்.

சட்டசபை முன் ஆர்ப்பாட்டம்

அருவருக்கத்தக்க செயல்

தி. மு. கழகக் கொடி ஏந்திக்கொண்டு ஒரு தோழர் சட்டசபை முன் ஆர்ப்பாட்டம் செய்ததாகப் பத்திரிகை மூலம் அறிந்து அருவருப்படைந்தேன்.

கண்ணியமும், கட்டுப்பாடும் கொண்ட ஒரு கழகத்தின் நற்பெயருக்குக் களங்கம் ஏற்படும் விதமாக நடந்துகொண்டது, வன்மையாகக் கண்டிக்கத்தக்கது.

சென்னை மாவட்ட தி. மு. கழகச் செயலாளர் இது குறித்து உடனே அறிக்கை வெளியிட்டு, நிலைமையை விளக்கியதைப் பாராட்டுகிறேன்.

தி. மு. கழகம், எத்தகைய கிளர்ச்சி துவக்குவதாக இருந்தாலும், பொதுக் குழுவின் முடிவுக்குப் பிறகு, முறைப்படி பொதுமக்களுக்கு விளக்கமளித்துவிட்டுத்தான், அதில் ஈடுபடும் என்பதை அனைவரும் அறிவர்.

யாரோ ஒரு தோழர்—ஆர்வம் என்றோ, எழுச்சி என்றோ, வீரம் என்றோ கருதிக்கொண்டு, அருவருக்கத்தக்க முறையில் நடந்துகொண்டார்—இதற்கும் தி. மு. கழகத்துக்கும் எத்தகைய தொடர்பும் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்வதோடு, கழகத்தின் மாண்பில் அக்கரை உள்ள தோழர்கள் இதுபோன்ற கருத்தற்ற செயலில் ஈடுபடுவோரை ஊக்குவிக்காமல், கழகத்திலிருந்து வெளியேற்றிவிடவும் வேண்டும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

அன்பன்

அண்ணதுரை,

தி. மு. க. பொதுச்செயலாளர்

பெண் பள்ளியைக் காண மதத் தலைவர் முதலில் ஒப்பினர்

நிர்வாகி விதவை எனத் தெரிந்ததும் காண மறுத்தார்

விதவையைக் காணக்கூடாது என மதத்தலைவர் மறுப்பு

பூனா—

" 'நான் எனது முகத்தை வெளியில் காட்டாது மறைத்துக்கொள்ள வேண்டுமென்பதற்காக நான் ஏதேனும் பாபம் செய்துவிட்டேனு என்ன,'—என்று என்னையே நான் கேட்டுக்கொண்டேன்."

"மதத் தலைவரின் ஆசியைப் பெற ஆவல்தான்; எனினும், 'அவரை நான் வரவேற்கக் கூடாது' என்று அவர் விதித்த நிபந்தனையை நான் ஏற்றுக்கொள்ளாது நிராகரித்துவிட்டேன்."

"பெண் கல்வியின் நோக்கமெல்லாம், பெண்களுக்கு ஏற்பட்டிருக்கும் இத்தகைய நிந்தனைகளை, இழிவுகளைத் துடைக்க வேண்டுமென்பதுதானே!"

—இவ்வாறு, இங்கு நடைபெற்ற பெண்கள் மாநாடொன்றில் பேசிய டாக்டர் கமலாபாய் தேஷ்பாண்டே எனும் பெண்மணி, தான் விதவையாயிருக்கும் காரணத்தால், தான் நிர்வாக அதிகாரியாயிருந்த பள்ளியொன்றுக்கு மதத் தலைவர் ஒருவர் வர மறுத்துவிட்டச் சம்பவத்தைக் குறிப்பிட்டுக் கூறினர்.

டாக்டர் கமலாபாய் தேஷ்பாண்டே, சதாரா எனுமிடத்தில் உள்ள 'கன்யா சாலை' ஒன்றின் நிர்வாக அதிகாரி.

அந்த 'கன்யா சாலை'க்கு மதத் தலைவர் ஒருவர் வருகை தருவதாயிருந்தது. ஆனால், பள்ளித் தலைவர் விதவை என்று தெரிந்ததும், தன்னை அந்த விதவையாகிவிட்ட பெண்மணி வரவேற்கக் கூடாதென்று நிபந்தனை விதித்தாராம்.

அந்த நிபந்தனையை ஏற்றுக் கொள்ள திருமதி தேஷ்பாண்டே மறுத்துவிடவே, மதத் தலைவரும் பள்ளிக்கு வராமலேயே போய்விட்டாராம்.

ஜப்பான் மந்திரி சபை வீழ்ச்சி

டோக்கியோ, டிச. 7—

ஜப்பான் ஆட்சிபீடத்தில் யோஷிடாவின் தலைமையில் இயங்கி வந்த மந்திரிசபை இன்று இராஜினமா செய்துவிட்டது.

யோஷிடா மந்திரி சபை மீது எதிர்க்கட்சியினரின் நம்பிக்கையில்லாப் பிரரேபணைமீது வாக்குப் பதிவு நடைபெற இருந்தது; ஆனல், வாக்குப் பதிவு நிச்சயமாக தமக்குத் தோல்வியையே தரும் என்றறிந்த யோஷிடா, தமது மந்திரிசபையின் இராஜினமாவைத் தாக்கல் செய்துவிட்டாராம்.

யோஷிடாவின் மந்திரி சபை இராஜினமாச் செய்துவிட்டதை ஒட்டி புதியதாகத் தோன்றியுள்ள ஜனநாயகக் கட்சியின் தலைவரான இச்சிரோஹாட்டியாமாவை மந்திரி சபை அமைக்குமாறு மக்கள் கேட்டுக்கொள்ள வேண்டுமென அரசியல் வட்டாரங்கள் கருதுகின்றனவாம்.

ஹாட்டியாமாவுக்கு, சோஷலிஸ்டுகளின் ஆதரவு கிடைக்குமாம்

பொதுக் குழு

★

தி. மு. கழகப் பொதுக் குழு ஜனவரித் திங்கள் (பதினைந்தாம் தேதிக்கு மேல்) நடைபெற ஏற்பாடாகி வருகிறது.

கோவை மாவட்டத்தில் இம்முறை பொதுக் குழுக் கூட்டத்தை நடத்த வேண்டுமென்று கோவை மாவட்ட தி. மு. கழகத் தோழர்கள் அன்பழைப்பு தந்துள்ளனர்.

சிறப்பான முறையில் பொதுக் குழுக் கூட்டத்தை நடத்த, கோவை மாவட்டத் தோழர்கள் இப்போதிருந்தே ஏற்பாடுகள் செய்யத் தொடங்கியுள்ளனர்.

கோவை நகரை அடுத்த **பேரூர்** என்ற சிற்றூரில், பொதுக் குழு கூட இருக்கிறது.

மாநில மாநாடு—'நம் நாடு' இதழ்—இவை பற்றிய திட்டம் தீட்டுவதற்காக பொதுக் குழு கூடுகிறது.

மற்ற விவரம், அடுத்த அறிக்கையில்.

—தி. மு. க. தலைமை நிலையம்

எரிமலை சீறுகிறது!

ஸ்டிராம்போலி (தெற்கு இத்தாலி) டிச. 7—

இங்குள்ள எரிமலை ஒன்றின் முகத்துவாரத்திலிருந்தும் அக்னிக் குழம்பு மூன்று கால்வாய்கள் வழியாக வழிந்து, கடலை நோக்கி மணிக்கு 10 மைல் வீதம் ஓட ஆரம்பித்துள்ளதாம்.

நெருப்பு மலை, சாம்பலை அனலையும் அள்ளி வீசி வருகிறதாம்.

நம் நாடு
தி.மு.க.தின இதழ் ஆசிரியர்: அண்ணாதுரை

சென்னை 8—12—1954 புதன்

தமிழ் ஆட்சி மொழி

சென்னை மாநிலத்தின் ஆட்சி மொழியாகத் தமிழ் மொழி சட்டப்படி உறுதி செய்யப்பட வேண்டுமென்பதற்காக, மேல் சபை உறுப்பினரான தோழர் கஜபதி அவர்கள் தீர்மானம் ஒன்றை ஏற்கனவே அனுப்பி இருந்தார். அத்தீர்மானத்தின்மீது எழுந்த விவாதத்தின்போது, தமிழை ஆட்சி மொழியாக ஒப்புக்கொள்வதில் ஆட்சியாளர்களுக்கு ஆட்சேபணை எதுவும் கிடையாது என்றும், சென்னை மாநிலத்தில் கன்னடப் பகுதியும், மலையாளப் பகுதியும் இணைந்து இருக்கிற காரணத்தால்தான் உடனடியாகத் தமிழ் மொழியை ஆட்சி மொழியாக ஒப்புக்கொள்வது இயலாததாக இருக்கிறது என்றும், ஆட்சியாளர்கள் சார்பில் சமாதானம் கூறப்பட்டது.

தமிழை ஆட்சி மொழியாக்குவது குறித்து, நடைபெற்று வரும் சட்டசபைக் கூட்டத்தைத் துவங்கி வைத்த கவர்னர் குறிப்பிடாதிருந்துவிட்டதைக் குறித்து, தோழர் கஜபதி அவர்கள் தாம் பேசும்பொழுது சுட்டிக்காட்டினர். அதற்கு ஆட்சியாளர்கள் சார்பில், முன்னர்கூறியசமாதானமே இப்பொழுதும் கூறப்பட்டிருக்கிறது.

'நிர்வாக அலுவல்கள் அனைத்தையும் தமிழில் செய்துவிட முடியும் என நினைத்தல் கூடாது. தமிழை ஏற்றுக்கொள்வதில் எண்ணத்தொலையாத இடுக்கண்கள் உள்ளன. சட்டசபையின் மொழியாக ஆந்திர மொழியை ஏற்றுக்கொண்டுள்ள ஆந்திராவிலும் கூட அது முழுதும் செயலாற்றக்கூடிய ஏற்பாடாக இல்லாமல் இருக்கிறது;'—எனவும் ஆட்சியாளர் சார்பில் கூறப்பட்டுள்ளன.

தமிழ் மொழியை சட்டப்படி ஆட்சிமொழியாக ஏற்றுக்கொண்டபோதிலும்கூட, அரசாங்க அலுவல்கள் அனைத்தையும் அம்மொழியின் மூலமாக மட்டுமே செயலாற்றிவிட முடியாது என்று ஆட்சியாளர்கள் கூறுகின்றனர். அதனால் பல இடுக்கண்கள் ஏற்படக்கூடும் எனவும் அரசாங்கம் அஞ்சுகிறது. தனக்குள்ள அச்சத்தை உறுதிப்படுத்த ஆந்திர உதாரணத்தையும் அரசாங்கம் சுட்டிக்காட்டி இருக்கிறது.

மூவேந்தர்களின் ஆட்சி மொழியாக இருந்துவந்தத் தமிழ், அதே நிலையில், விஞ்ஞான வளம் கூடியுள்ள இக்காலத்திய அரசாங்க அலுவல்களின் மொழித் தேவையை நிறைவேற்றாது என்பதை நாமும் ஒப்புகிறோம். காலத்துக்கேற்ப, வேண்டப்படும் பற்பல கலைச் சொற்களையும் கொண்டதாகத் தமிழ் வளம் பெற்றாக வேண்டும் என்பதிலும் நமக்கு மாறுபட்ட கருத்து கிடையாது. அரசாங்க அலுவல்களைத் திறம்பட நிறைவேற்றும் ஆற்றல் இன்றுள்ள தமிழ் மொழிக்கு இல்லாமல் இருக்கலாம். ஆனால், எதிர்காலத்தில் அத்தகு ஆற்றல் தமிழ் மொழிக்கு ஏற்படவே ஏற்படாது என காங்கிரஸ் ஆளவந்தார்கள் உட்பட, வேறு எவரும் கூறுர் என்றே நம்புகிறோம்.

அரசாங்க அலுவல்கள் அனைத்தையும் அறிவிக்க இன்றைய நிலையில் தமிழுக்கு ஆற்றல் இருக்கிறதா இல்லையா என்பதல்ல பிரச்சினை. தமிழை ஆட்சி மொழியாகச் சட்டப்படி ஒப்புக்கொள்ள அரசாங்கம் முன்வர வேண்டும் என விரும்புகிறவர்களினுடையவும், வலியுறுத்துகிறவர்களினுடையவும் கருத்தும் அது அல்ல. அவர்கள் நோக்கமே வேறு. அந்த நல்ல நோக்கத்தை ஆட்சியாளர்களும் அறிவர்.

அதாவது, தமிழ் மொழியை ஆட்சி மொழியாக ஒப்புக்கொண்டால் அல்லாது, தமிழ் வழங்கும் பகுதிகளில் அரசாங்க அலுவல்களுக்குத் தமிழை மேற்கொள்ளும் உரிமை, வருங்காலத்தில் சட்டப்படி தமிழுக்கு இல்லாமல் போய்விடும். அரசியல் சட்ட விதி ஒன்று இந்த அச்சுறுத்தலை உள்ளடக்கிக்கொண்டும் இருக்கிறது. இதை தோழர் கஜபதி அவர்கள் ஏற்கனவே எடுத்துக்காட்டியும் உள்ளார். எனவே, சென்னை மாநிலத்தின் ஆட்சி மொழி தமிழ்தான் என சட்டப்படி இப்பொழுது உறுதி செய்ய வேண்டிய பொறுப்பு, காங்கிரஸ் ஆட்சியாளர்கள் உள்பட, தமிழர் அனைவருக்கும் உண்டு. அந்தப் பொறுப்பை இப்பொழுதே உடனடியாக நிறைவேற்றி வைக்க ஆட்சியாளர்கள் முன்வர வேண்டும்.

தமிழ் வழங்கும் பகுதியில் தமிழ்தான் ஆட்சி மொழியாக இருந்தாக வேண்டும் என்பது கூறாமலே விளங்கும். அரசாங்க அலுவல்கள் அனைத்திலும் இன்றுள்ள ஆங்கிலத்தைச் சிறுகச் சிறுக அகற்றிவிட்டுத்தான், அரங்கத்தில் தமிழ் மொழியை மெள்ள மெள்ளப் புகுத்த முடியும். தமிழ் மக்களிடையே அதற்கான ஆர்வம், இன்றுள்ளதைக் காட்டிலும், தரத்திலும் தன்மையிலும் பெருக வேண்டும். தமிழ் மொழியை ஆட்சி மொழியாக சட்டப்படி ஒப்புவது, மக்களின் தமிழ்ப் பற்றை வளர்ப்பதற்குப் பெரிதும் துணை நிற்கும். எனவே, தமிழை ஆட்சி மொழியாக அரசாங்கம் ஏற்றுக்கொள்வது, தமிழ் மொழி வளர்ச்சிக்கும், முன்னேற்றத்திற்கும் மேற்கொள்ளப்படும் ஒரு துவக்க முயற்சியேயாகும். தமிழ்தான் ஆட்சி மொழியாக வேண்டும் என்ற நல்லெண்ணம், தாங்கள் கூறிக்கொள்வது போன்று, காங்கிரஸ் ஆளவந்தார்களுக்கு இருப்பது உண்மையானால், அதற்கான ஒப்புதலைத் தர ஆட்சியாளர்கள் தயங்கவேண்டிய காரணமே ஒரு துளியும் கிடையாது.

சென்னை மாநில ஆட்சியாளர்கள் அறிந்திருப்பது போலவே, ஆந்திர மாநில ஆட்சியாளர்களும், அரசாங்க அலுவல்களில் ஆங்கிலம் ஆற்றிவந்த பணியினை, உடனடியாக ஆந்திர மொழியால் அகற்ற முடியாது என்பதை அறிவர். உண்மை தெரிந்திருந்த போதிலும், இன்றைய நிலையில் ஆந்திர மொழிக்குள்ள ஆற்றலின்மையை முன்தள்ளி, அம்மொழிக்கு உரித்தான உரிமையைச் சட்டப்படி வழங்க, ஆந்திர ஆட்சியாளர்கள் மறுத்துவிடவில்லை. அதற்கு மாறாக, ஆட்சி மொழியாக ஆந்திரத்தை, அவர்கள் ஏற்றுக் கொண்டுள்ளனர்.

தெலுங்கு மொழி பூராவாக நிர்வாக வேலைகளுக்கு இப்போதைய நிலையில் பயன்படமுடியவில்லை என்பதாலேயே ஆந்திர அரசாங்கம், தெலுங்கை ஆட்சி மொழியாக்காமலிருக்கவில்லை.

ஆந்திர ஆட்சியாளர்கள், தங்கள் மொழிநலங் கருதி, தங்கள் தாய்மொழிக்குரிய பங்கை, சட்டப்படி வரையறுத்துள்ளது போன்றே, சென்னை ஆட்சியாளர்களும் தாய் மொழியாம் தமிழை, சட்டப்படி ஆட்சி மொழியாக ஏற்றுக்கொள்ள வேண்டும். தமிழுக்கு, காங்கிரஸ் ஆளவந்தார்கள் செய்யவேண்டிய முதற் கடமை அதுதான். தங்கள் கடமையை உடனடியாக நிறைவேற்றிவைக்கும்படி ஆட்சியாளர்களை வேண்டிக் கொள்கிறோம்.

இதை விடுத்து, அரசாங்க அலுவல்கள் அனைத்தையும் நடத்துவிப்பதற்கு தமிழ் ஆற்றல் பெற்றிருக்கவில்லை, அரசு செயல்களுக்குத் தமிழை ஒப்புக்கொள்வதால் இடுக்கண்கள் பலஉண்டு எனக்காரணம் கூறி, தமிழ் மொழியை சட்டப்படி ஆட்சி மொழியாக்க முடியாது என காங்கிரஸ் ஆளவந்தார்கள், மேலும் பிடிவாதம் பேசி வருவார்களேயானால், தமிழ் ஏற்றம் பெறுவதில் அவர்களுக்கு உண்மையிலேயே நல்லெண்ணம் கிடையாது என்ற முடிவிற்குத்தான் தமிழ் மக்கள் வர நேரிடும் என எச்சரிக்கின்றோம்.

சுமார் 5 லட்சம் கிராமங்களில் 3 லட்சம் கிராமங்கள் பஞ்சாயத்துக்கள் கொண்டவையாகும்.

சர்க்கார் ஊழியரிடை நிலவும் லஞ்ச ஊழலை ஒழிக்க முயற்சி

உ. பி. சர்க்கார் நடவடிக்கை

பரிசுகள், அன்பளிப்புகள் பெறக்கூடாது

சொத்துக்களின் மதிப்புபற்றிய உறுதிமொழி வேண்டும்

"சர்க்கார் ஊழியர்கள் எல்லோரும் தங்களின் வசமுள்ள அசையாப் பொருள்கள் (வீடு, நிலம் போன்றவை) முதலீடு, வர்த்தகப் பங்கு ஆகியவற்றின் மதிப்பு குறித்து சர்க்காருக்குத் தெரிவிக்க வேண்டும். அவ்வப்பொழுது, ஒரு சர்க்கார் ஊழியர் தன்னுலோ, தன் மனைவி மக்கள் அல்லது தன்னைச் சார்ந்து தன்னுல் காப்பாற்றப்பட்டு வாழ்பவர்களாலோ வாங்குகிற சொத்துக்கள், முதலீடு செய்யும் மூலதனம் இவை பற்றி அப்போதைக்கப்போது அறிவிக்க வேண்டும்.

" முதலில் வேலைக்கு அமரும்போதும், பின்னர் 5 ஆண்டிற்கு ஒருமுறையும் மேற்கண்ட தகவல்களை சர்க்காருக்குத் தரவேண்டும். ஏற்கனவே வேலையில் அமர்ந்திருப்பவர்கள், இப்போதே தங்களுடைய முதல் உறுதிமொழியினைத் தரவேண்டும்,"

—இப்படி ஒரு விதியை, சர்க்கார் ஊழியர்கள் லஞ்சம் வாங்குவதைத் தடுப்பதற்காக உத்திரப் பிரதேச சர்க்கார் விதித்துள்ளார்களாம்.

சர்க்கார் ஊழியர்களின் நடத்தை விதிகளில், லஞ்சம் வாங்குவதைத் தடுக்கச் செய்யப்படும் திருத்தத்தில் மேலும் காணப்படுவதாவது :—

"நெருங்கிய உறவினரல்லாத வேறு யாரிடமிருந்தும், சர்க்கார் ஊழியர்கள் எவ்வித நன்கொடை, வெகுமானம், பரிசு, அன்பளிப்பு இவைகளைப் பெறக்கூடாது."

இந்த விதி, சர்க்கார் ஊழியரின் ஊதியத்தில் வாழ்க்கை நடத்தும் வரது குடும்பத்தவர் அனைவருக்கும் பொருந்துவதாகும்.

"என்றாலும், ஒரு சர்க்கார் ஊழியர் தனது குடும்ப அங்கத்தினர்களின் திருமணம் போன்ற விழாக்களின்போது அவர் தம் உறவினர், நண்பர்கள் ஆகியோரிடமிருந்து ரூ. 5-க்கு அதிகமாகாத பொருள்களை பரிசாகப் பெற அனுமதிக்கலாம். கூடியவரையிலும் சர்க்கார் ஊழியர்கள் இத்தகைய பரிசுகள் பெறுவதை குறைத்துக்கொள்ள வேண்டும்," என்றும் அத்திருத்த விதி கூறுகிறதாம்.

1953—54-ம் ஆண்டில், இந்தியாவில் நெல் உற்பத்தி 271-கோடி டன்னும், நெல் சாகுபடி விஸ்தீரணம் 766 கோடி ஏக்கராவுமாக இருந்தன. இவை விஷயத்தில் ஐந்தாண்டுத் திட்டத்தில் 1955—56-ம் ஆண்டிற்கு நிர்ணயிக்கப்பட்டுள்ள லட்சிய அளவுகள் முறையே 2·72 கோடி டன்னும், 3 கோடி ஏகராவுமாகும்.

இந்தியத் துணிகளின் போட்டி

லங்காஷயர் பாதிக்கப்படுகிறதாம்

லண்டன், டிச. 6—

இந்தியாவின் போட்டியினுல் லங்காஷயர் ஜவுளித் தொழில் பாதிக்கப்பட்டிருக்கிறதென்றும், நிலைமையைச் சமாளிக்க பிரிட்டிஷ் சர்க்கார் உடனே நடவடிக்கை எடுக்கவேண்டுமென்றும் 'மாஞ்செஸ்டர் கார்டியன்' கேட்டுக் கொண்டுள்ளதாம்.

இப்பிரச்சினை பற்றி இப்பத்திரிகை வெளியிட்டுள்ள தனிக் கட்டுரை ஒன்றில் இக்கருத்து காணப்படுகிறது.

இந்தியத் துணி இறக்குமதியினுல் லங்காஷயரில் வேலையில்லாத் திண்டாட்டம் ஏதும் ஏற்படவில்லை என்றாலும், உள்நாட்டிலிருந்து ஏற்றுமதி குறைந்துவிட்டதாகையால், ஜப்பான் இதர நாடுகளின் போட்டியைவிட இந்தியாவின் போட்டி பற்றி சர்க்கார் ஆவன செய்வது அவசியம் என்று அக்கட்டுரையில் வற்புறுத்தப்பட்டிருக்கிறதாம்.

இந்தியாவிலிருந்து இறக்குமதியை நிறுத்த வேண்டுமென்பது இதன் மூலம் பொருள்படக் கூடாது ; ஆனுல் போட்டியானது சுதந்திரமாக இல்லை என்றும், இந்தியா தனது துணிகளை குறைந்த விலைக்கு விற்பனை செய்கிறது என்றும் சுட்டிக்காட்டப் படுகிறது.

இந்தியா, காமன்வெல்த்தில் இருப்பதால்தான் இந்த நிலைமையாம் !

லங்காஷயரின் குறைகளை பிரிட்டன் அனுதாபத்துடன் கவனிக்க வேண்டுமென்று 'மாஞ்செஸ்டர் கார்டியன்' வற்புறுத்தியிருக்கிறது.

"அகாலி தளம்" சீக்கியரின் மத உணர்வை தூண்டிற்று !

'அதுவே அதன் வெற்றிக்குக் காரணம் !'

தோற்றுப்போனவர் சாட்டும் குற்றம்

"பஞ்சாப் மாநிலத்தில் சிரோமணி குருத்துவாராபிரபந்த கமிட்டி தேர்தலில் மாஸ்டர் தாராசிங்கைத் தலைவராகக் கொண்ட அகாலி தளம் மகத்தான வெற்றி பெற்றிருப்பது, பஞ்சாப் மொழி பேசும் மாநிலம் அமைக்க வேண்டுமென்ற கோரிக்கையை உறுதிப்படுத்துகிறது," என்று மாஸ்டர் தாராசிங் கூறியுள்ளார்.

தோற்றுப்போன தேசிய கால்சா தள கட்சியைச் சேர்ந்த பஞ்சாப் நிதி மந்திரியான உஜ்ஜல் சிங் என்பவர், "அகாலி தளத்தவர் 'விஷம்' கலந்த பொய்ப் பிரச்சாரத்தால் வெற்றி பெற்றிருக்கின்றனர்; அவர்கள் சீக்கிய மக்களின் மத உணர்வைத் தூண்டிவிட்டு, மத அடிப்படையிலேயே தேர்தலில் வெற்றியும் பெற்றிருக்கிறார்கள்," என்று குற்றஞ் சுமத்தியுள்ளார்.

அகாலிதளத்தவர் வெற்றி விழா கொண்டாடுவர்

அமிர்தசரஸ்—

சீக்கியர்களின் உயர்தர மதக் கவுன்சிலின் பெயர்தான் 'சிரோமணி குருத்துவார் பிரபந்தக் கமிட்டி' என்பது. அதற்கான தேர்தல் நடந்து முடிவுற்றுள்ளது.

அகாலிதளம் 111, கம்யூனிஸ்டுகள் 17, கால்கா தளம் 6, சுயேச்சை 1 இதுவே முடிவுகள்.

அகாலி தள செயற் குழுவின் இரகசியக் கூட்டத்தில் தேர்தலில் தாங்கள் பெற்ற வெற்றியினை விமரிசையாகக் கொண்டாடுவதெனவும், 'கமிட்டி'யில் நிலவும் ஊழல்களைக் களைய நடவடிக்கைகளை மேற்கொள்ளுவதெனவும், குருத்துவாரின் நிதியை, மதப் பிரசார, கல்வி வளர்ச்சிக் காரியங்களுக்கும் பயன்படுத்துவதெனவும் முடிவாகியுள்ளதாம்.

வரும் டிசம்பர் 15-ந் தேதியை அவர்கள், 'நன்றியறிவிப்பு நாளா'கக் கொண்டாடக் கேட்டுக்கொண்டுள்ளனராம்,

---

இந்தியாவில் டெலிபிரிண்டர் உற்பத்தி !

புதுடில்லி, டிச. 6—

இந்தியாவில் டெலிபிரிண்டர் உற்பத்தி செய்ய தொழிற்சாலை ஒன்றை ஆரம்பிக்க சர்க்கார் ஆலோசனை செய்வதாகத் தெரிகிறது.

இந்திய மேல் சபையில் கேள்வி ஒன்றுக்குப் பதில் அளிக்கையில் செய்தி இலாகா உதவி அமைச்சர் ராஜ்பகதூர் இத்தகவலைக் கூறினுர்.

இந்தத் தொழிற்சாலை தனது உற்பத்தியைத் துவங்கும் வரையில் டெலிபிரிண்டர்கள் இப்போதுள்ள முறைகளின்படியே வரவழைக்கப்படும் என்று அவர் மேலும் கூறினுர்.

ஐந்தாண்டுத் திட்டத்தின் முதல் மூன்று ஆண்டு காலத்தில், மத்திய டிராக்டர் நிறுவனம் 5 லட்சம் ஏகர் விஸ்தீரணமுள்ள நிலத்தைத் திருத்திப் பண்படுத்தியிருக்கிறது.

கழகச் செய்திகள்

குளித்தலை தி. மு. கழகம்

14—11—54ல் தோழர் அ. தங்கராசன் தலைமையில் நடைபெற்ற கழகச் செயற்குழு கூட்டத்தில் புதிய நிர்வாகிகள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்:— செயலாளர்: கை. அங்கமுத்து; துணைச்செயலாளர்: மா. சீனிவாசன்; பொருளாளர்: பெ. கிருட்டிணசாமி; துணைப் பொருளாளர்: அ தங்கராசன். செயற்குழு உறுப்பினர்கள்: ச. அண்ணுவி, நா. மாணிக்கம், ஆர். பி. சாமி, ச. மகாமுனி, கே. இராமச்சந்திரன், எஸ்.பி.சாமி, ஏ. கே. கரீம், இரா. இரத்தினம், ஆர். கணேசன்.

குளித்தலை தி.மு.க. (கிளை)

14—11—54ல் நடைபெற்ற குளித்தலை கிளைக் கழகக் கூட்டத்தின்போது, புதிய நிர்வாகிகள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்:— செயலாளர்: கை. அங்கமுத்து, துணைச் செயலாளர்: மா. சீனிவாசன்; பொருளாளர்: பெ. கிருட்டிணசாமி; செயற்குழு உறுப்பினர்கள்: அ. தங்கராசன், ச. அண்ணுவி, ஆர். பி. சாமி, எஸ். பி. சாமி, ச. மகாமுனி, கே. இராமச்சந்திரன், என். மாணிக்கம், ஏ. கே. கரீம்.

ரயிலடி அம்மாபேட்டை தி. மு. கழகம்

20—11—54 இரவு 7 மணிக்கு, தோழர் ஏ. கே. கோவிந்தராசன் தலைமையில் நடைபெற்ற இவ்வூர் கழகச் செயற்குழுக் கூட்டத்தில், கழக நிர்வாகிகள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்:— செயலாளர்: எஸ். எம். பக்கிரிசாமி; துணைச்செயலாளர்: ஏ. கே. கோவிந்தராசன்; பொருளாளர்: எஸ் ஏ. சுல்தான்; விளம்பர உறுப்பினர்கள்: எஸ். ஏ. சத்தார்; என். கே. பிச்சையன்; செயற்குழு உறுப்பினர்கள்: பி. கலியபெருமாள், பி. மணி, எஸ். ராமதாஸ், வைத்திலிங்கம், சேட் அஜீஸ், தங்கராசன்.

தலவாக்கெலே (இலங்கை) தி. மு. க. பொதுக்கூட்டம்

20—11—54ல், கழகச் சார்பில் தோழர் வி. எம். பாண்டியன் தலைமையில், தோழர் ஏ. வி. பி. ஆசைத்தம்பி அவர்களுக்கு வரவேற்பளித்து, ஒரு பொதுக் கூட்டம் நடைபெற்றது. தோழர் ஆசைத்தம்பி அவர்கள் பேசுகையில், 'நாடற்றவரி'ன் பிரச்சினைகள் பற்றியும், மூடப் பழக்க வழக்கங்கள் பற்றியும் நீண்டதோர் சொற்பொழிவாற்றினர். கூட்டத்தின் போது மழை பெய்ததையும் பொருட்படுத்தாது பொதுமக்கள் கூடியிருந்து கூட்டத்தை சிறப்பித்தனர்.

சோழவந்தான் தி. மு. கழகம் (கிளை)

21—11—54ல், தோழர் அ. பரமசிவம் தலைமையில் நடைபெற்ற கழகப் பொதுக் குழு கூட்டத்தில் புதிய ஆண்டிற்கான கழக நிர்வாகிகள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்:— செயலாளர்: கா. சு. செல்லசாமி; துணைச் செயலாளர்: வீ. செங்குட்டுவன்; பொருளாளர்: ச. பழனியாண்டவன்; மாவட்டப் பிரதிநிதி: தா. ஆவுடையப்பன்; விளம்பர உறுப்பினர்கள்: மு. குருசாமி, கா. சு. குருசாமி. செயற்குழு உறுப்பினர்கள்: பொ. சௌந்தரபாண்டியன், கூ. குருசாமி, பாவா மொய்தீன், அ நடராசன். பின்னர், முன்னுள் செயலாளர் தோழர் எஸ் செல்லதுரையின் விலகுதல் ஏற்றுக்கொள்ளப்பட்டதுடன், டிசம்பர் திங்கள் இரண்டாவது வாரத்தில், கழகச் சார்பில் ஒரு பொதுக் கூட்டம் நடத்துவதெனவும் முடிவு செய்யப்பட்டது.

சேலம் நகர தி. மு. கழக ஆண்டு விழா

21—11—54 காலை 9-30 மணியளவில் சேலம் விக்டோரியா டாக்கீசில், தோழர் ஜி. பி. சோமசுந்தரம் தலைமையில் நடைபெற்ற போது, தலைவர் முன்னுரைக்குப் பின், தோழர் ஈ. ஆர். கிருஷ்ணன் நகரக் கிளையின் ஆண்டு அறிக்கையை வாசித்தார். பின்னர், மு. கருணாநிதி அவர்கள், சமுதாயத்தைப் பற்றி விளக்கமாகப் பேசியபின், தோழர் அலிசேக் மன்சூர் சிறிதுநேரம் சொற்பொழிவாற்றினர்.

ஃ ஃ ஃ

அன்று மாலை 6½ மணிக்கு விக்டோரியா மார்க்கெட் மைதானத்தில், தோழர் எம். பி. சுப்பிரமணியம் எம். எல். ஏ., தலைமையில் நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் கலைவர் அவர்கள், மத்திய சர்க்காரின் ஐந்தாண்டுத் திட்டத்தைப் பற்றியும், அந்தத் திட்டம் நம் மக்களுக்கு எவ்வித நன்மைகளையும் அளிக்காமல், வடநாட்டுக்குத்தான் பயன்படுகிறதென்பதையும் விளக்கமாகப் புள்ளி விபரங்களுடன் பேசியபின், தோழர்கள் சுரதா, சுப்பிரமணியம், அலிசேக் மன்சூர் ஆகியோர் சொற்பொழிவாற்றினர். இறுதியாகத் தோழர் மு. கருணாநிதி அவர்கள், திராவிட நாட்டுப் பிரச்சினை பற்றியும், வடநாடு, தென்னாட்டை எப்படி அசட்டை செய்கிறது என்பதைப் பற்றியும், நேரு வளர்ந்த அளவுக்கு நாடும், நாமும் வளரவில்லை என்பதையும் விளக்கிப் பேசினர்.

தோழர் கருணாநிதி அவர்கட்குப் பல கிளைக் கழகங்கள் சார்பில் மலர் மாலைகள் அணிவிக்கப்பட்டன.

கீழ்பென்னாத்தூர் தி. மு. கழகம்

21—11—54 மாலை 3 மணிக்கு நடைபெற்ற இவ்வூர் தி. மு. கழகச் செயற்குழு கூட்டத்தில், தோழர் ஆதிநாராயணன் செயலாளர் பதவியிலிருந்து விலக்கப்பட்டு, அவருக்குப் பதில் தோழர் ச. கண்ணன் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

சலுப்பை தி. மு. கழக அமைப்பு

22—11—54ல், சலுப்பை (ஜெயங்கொண்ட சோழபுரம்), வெத்தியார் வெட்டு, செரவாங்குடி, ராதாபுரம், நரசிங்கபாளையம், வங்குடி, அ. பேட்டை ஆகிய கிராமங்களிலுள்ள தி. மு. கழகத் தோழர்கள் சலுப்பை கிராமத்தில் தி. மு. கழகம் ஒன்றை நிறுவினர். தோழர் ஏ. நந்தகோபால் தலைமையில் நடைபெற்ற அவ்வமைப்புக் கூட்டத்தின்போது, கழக நிர்வாகிகளும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்: செயலாளர்: எஸ். கே. ரெங்கராசன்; துணைச் செயலாளர்: ந. வரதராசன்; பொருளாளர்: மு. இராமமூர்த்தி; மாவட்டப் பிரதிநிதி: மு. இராசகோபால்; விளம்பர உறுப்பினர்: பெ. அழகப்பன். செயற்குழு உறுப்பினர்கள்: அ. நந்தகோபால், இராமமூர்த்திபட்டுசாமி, அ. பட்டுசாமி, சு. கிருட்டிணசாமி.

ஒடைப்பட்டி (மதுரை மாவட்டம்) தி.மு.க. (கிளை)

24—11—54ல், தோழர் சின்னகாமராசு தலைமையில் நடைபெற்ற நிர்வாகக் குழுக் கூட்டத்தில், செயலாளராக தோழர் சின்னகாமராசுவும், துணைச் செயலாளராக ஏ. எஸ். பி சிவனும், பொருளாளராக சுருளிப்பாம்முவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர். பின்னர், டிசம்பர் மாதக் கடைசி வாரத்தில் பொதுக் கூட்டம் நடத்த ஏற்பாடு செய்வதென முடிவு செய்யப்பட்டது.

அங்கும் 'பார்ப்பனீயம்'!

ஜோகனஸ்பர்க், டிச. 6—

"வெள்ளையர், வெள்ளையரல்லாதார் ஆகிய இருசாராரின் உபயோகத்திற்காக, 'கரன்சி நோட்டு'கள் (நாணயச் செலாவணி) வெள்ளையாகவும், கருப்பாகவும் தனித்தனியாக அச்சிட்டு, பாங்கிகள் வெளியிட வேண்டும்"—

(இங்கு 'பார்ப்பனர்கள் சாப்பிடுமிடம்' என்று சில ஆண்டு முன்பு வரை இருக்கவில்லையா என்ன?)— என்று, ஒருவர், பத்திரிகையொன்றுக்குக் கடிதம் வரைந்துள்ளதாக செய்தி வெளிவந்துள்ளது.

அந்தக் கடிதத்தை எழுதியவர், 'அதிருப்தியடைந்தோன்' என்று கையொப்பமிட்டுள்ளாராம்.

அவர் கூறுகிருர்:—

"ஒருநாள், பாங்கியில், அப்போதுதான் கபீர் என்ற வெள்ளையரல்லாத ஒருவர், ஒரு பவுன் நோட்டை என்னிடம் தந்தபோது, நான் அதிர்ச்சியடைந்தேன். நிச்சயமாக, சர்க்கார், வெள்ளையருக்கும், வெள்ளையரல்லாதவருக்குமாக தனித்தனி நாணயச் செலாவணிகள் (நோட்டுகள்) வெள்ளை, கருப்பு நிறங்களில் அச்சிடவேண்டும்."

மூங்கில்பாடி (திருச்சி — மாவட்டம்) தி. மு. கழகம்

24—11—54 இரவு 7 மணிக்கு, தோழர் செல்லப்பிள்ளை தலைமையில் நடைபெற்ற இவ்வூர் தி. மு கழக மூன்ருவது ஆண்டு விழாப் பொதுக்கூட்டத்தில், நாட்டு நிலை, அதன் பண்பு ஆகியவை பற்றி பல கழகத் தோழர்கள் பேசினர்.

கோவிலடி (தஞ்சை மாவட்டம்) தி. மு. கழகம்

25—11—54ல், இவ்வூரில், தோழர் சு. சி. வயலரசன் தலைமையில் நடைபெற்ற கழகப் பொதுக்குழுக் கூட்டத்தின்போது, துணைச் செயலாளராகப் பணியாற்றிவரும் தோழர் இரா. ஆதிராசு அவர்கள், தமது சொந்த வேலை காரணமாகக் கழக அலுவல்களைக் கவனிக்காத காரணத்தால், அவரை விலக்கி, அவருக்குப் பதிலாகத் தோழர் இரா. அரங்கசாமி துணைச் செயலாளராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

கும்மிடிபூண்டி தி. மு. க.

27—11—54 மாலை 4 மணிக்கு தோழர் ப. செ. தூயமணி தலைமையில் நடைபெற்ற கழகச் செயற்குழுக் கூட்டத்தில், இவ்வாண்டு அக்டோபர் திங்களில் நடைபெற்ற கழகப் பொதுக் கூட்ட வரவு-செலவு கணக்கு பரிசீலனை செய்யப்பட்டு ஒப்புக்கொள்ளப்பட்டது. பின்னர், டிசம்பர் திங்களில் ஓர் பொதுக்கூட்டம் நடத்துவது எனவும், கடந்த 3 மாத வரவு—செலவைப் பரிசீலிக்க ஓர் தணிக்கைக் குழு நியமிக்கப்பட்டு, குழுவின் உறுப்பினர்களாகத் தோழர்கள் இராதாமணாளன், இசையரசு, புவியரசு ஆகியோர் தேர்ந்தெடுக்கப்பட்டு, அடுத்த செயற்குழு கூட்டுவதற்குள் தங்கள் அறிக்கையை செயற்குழுவிற்குக் கொடுத்துவிட வேண்டுமெனவும், டிசம்பர் திங்களில் பொதுக் குழுவைக் கூட்டுவதெனவும் தீர்மானிக்கப்பட்டது.

* * *

அன்று இரவு இவ்வூருக்கு 1½ மைல் தூரத்திலுள்ள வேற்காடு என்னும் சிற்றூரில், கும்மிடிபூண்டி தி. மு. கழக சார்பில் ஓர் பிரச்சாரக் கூட்டம், திரு. அரங்கசாமி தலைமையில் நடைபெற்றது. தோழர் ப. செ. தூயமணி அனைவரையும் வரவேற்றுப் பேசினர். பின்னர் சமுதாயத்தில் உள்ள குறைகளைப்பற்றியும், மதம், கடவுள், தற்கால பொருளாதாரம், வடநாட்டுச் சுரண்டல், திராவிட நாடு பிரிவினையின் அவசியம், மக்களுக்கு அதனுல் கிடைக்கும் பயன் ஆகியவை பற்றித் தோழர்கள் இராதாமணாளன், ஆ. கிருஷ்ணன் ஆகியோர் சொற்பொழிவாற்றினர்.

'இன ஒதுக்கல்': தொத்து நோயாகிறது

எல்லைக்கு அப்பாலும் அந்த 'நோய்' பரவ வேண்டுமாம்!

தென்னுப்பிரிக்கப் புதிய பிரதமரின் பிதற்றல்

தென் ஆப்பிரிக்காவின் புதிய பிரதமராக மலானுக்குப் பிறகு தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள ஸ்ட்ரீடம் இன ஒதுக்கல் கொள்கையில் மலானுக்குச்சளைத்தவரல்ல—மாலானையும் மிஞ்சியவர் என்று வெளிவந்த செய்திகளை உறுதிப்படுத்தும் வகையில் அவர் சமீபத்தில் ஆற்றிய உரையொன்றின் சாரம் அமைந்துள்ளது.

அவர் குறிப்பிட்டாராம்—"இன ஒதுக்கல் கொள்கையை ஆப்பிரிக்காவில் மட்டும் காப்பாற்றினுல் போதுமானதல்ல: ஆப்பிரிக்க எல்லைக்கு அப்பாலும இன ஒதுக்கல் கொள்கையை விரிவு படுத்த வேண்டும்"—என்று!

"இனப் பிரச்சினையில், தென் ஆப்பிரிக்கா தன்னுடைய பொறுப்புகளை மறந்தால் இந்தியாவில் பிரிட்டிஷார் செய்ததுபோல இங்கும் வெள்ளையர்பணியவேண்டியிருக்கும்; பிரிட்டிஷாராவது பிரிட்டனுக்குத் திரும்பிப் போக முடிந்தது; தென் ஆப்பிரிக்க வெள்ளையர், ஆப்பிரிக்காவைத் தவிர வேறெங்கும் போகமுடியாது; அவர்களின் வாழ்வும் — தாழ்வும் தென்னுப்பிரிக்காவிற்குள் தான் இருக்க முடியும்," என்றும் அவர் கூறியுள்ளார்.

மணப்பாறையில் தி. மு. க. பொதுக்கூட்டம்

27—11—54 மாலை 6 மணிக்கு, காந்தி சதுக்கத்தில், தோழர் மா. இளங்கீரன் தலைமையில் நடைபெற்ற கழகப் பொதுக்கூட்டத்தில், தோழர்கள் அன்பில் தர்மலிங்கம், ஈ. வெ. கி. சம்பத் ஆகியோர் மணவை தி. மு கழகத்தினரால் வரவேற்கப்பட்டு, வரவேற்புப் பத்திரமும், மலர்மாலைகளும் அணிவிக்கப் பெற்றனர். பகுத்தறிவு மன்றம், விடத்தலாம்பட்டி, தோகைமலை, பன்னங்கொம்பு ஆகிய இடங்களிலுள்ள தி. மு. கழகங்களின் சார்பில் அனைவருக்கும் மாலை சூட்டப்பட்டது. பின்னர், தோழர்கள் மீ. சு. இளமுருகு-பொற்செல்வி, டி. வி. முத்துக் கிருஷ்ணன், அன்பில் தர்மலிங்கம் ஆகியோர் பல தலைப்புகளில்பேசியபின், தோழர் சம்பத், அரசியலின் பெயரால் நடைபெறும் பதவி வேட்டையையும்,காங்கிரஸ் தனது மானமிழந்து கண்ணி வைத்து ஆள் பிடிக்கும் தரக் குறைவான செயலையும், நேருவுக்குப் பின் இந்தியாவின் நிலை பற்றியும், மற்றும் பல கருத்துக்களை விளக்கியும் சொற்பொழிவாற்றினர்.

* * *

அன்பில் தர்மலிங்கம் அவர்களுக்கு பாராட்டு விருந்து

அன்று இரவு 10 மணிக்கு, மணவைத் தோழர் சி. வெ. ந. கோபால கிருட்டிணன் இல்லத்தில், மணப்பாறை தி மு. கழகத்தினர் தோழர் அன்பில் — தர்மலிங்கத்தைப் பாராட்டி, ஒரு விருந்து நடத்தினர். விருந்துக்குப் பின் இசை நிகழ்ச்சியும், புகைப்படம் எடுத்தலும் நடைபெற்றன.

கவசம்பட்டு தி. மு. கழகம்

27—11—54ல் நடைபெற்ற கழகச் செயற்குழு கூட்டத்தின் போது, புதிய நிர்வாகிகள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்:— செயலாளர்: எம். தெய்வசிகாமணி; துணைச் செயலாளர்: ஜி. சாமிநாதன்; பொருளாளர்: கே. பி. சாமிநாதன்; மாவட்டப்பிரதிநிதி: கே. விஸ்வநாதன்.

பம்பாய் தி. மு. கழகம்

27—11—54 இரவு 7 மணிக்கு 'திராவிடர்'கத்தில், தோழர் ஏ. எஸ். ஆறுமுகம் தலைமையில் நடைபெற்ற கழகச் செயற்குழுக் கூட்டத்தில், கடந்த கூட்ட நிகழ்ச்சிகளும் கடிதப் போக்குவரத்துகளும் ஒப்புக்கொள்ளப்பட்டபின், புதிய நிர்வாகிகளின் தேர்தல் கூட்டம் டிசம்பர் 25-ந் தேதியில் நடத்துவதெனவும், டிசம்பர் இரண்டாவது வாரத்தில் ஒரு பொதுக்கூட்டம் நடத்துவதெனவும், பம்பாய் மாவட்ட தி மு. கழகச் சார்பாக பொங்கல் விழா நடத்துவதை ஆதரித்தும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

திருவானைக்காவல் தி.மு.க.

27—11—54 இரவு 10 மணிக்கு தோழர் எம். எஸ். முத்து தலைமையில் நடைபெற்ற இவ்வூர் கழகச் செயற்குழுக் கூட்டத்தில், கழகப் படிப்பகமான வ. உ. சி. படிப்பகத்தின் முதலாண்டு விழாவை பொங்கல் வாரத்தில் நடத்துவதெனவும், பொங்கல் விழாவை சிறப்புற நடத்துவதெனவும் தீர்மானிக்கப்பட்டது.

மதுராந்தகத்தில் தி. மு. கழகப் பொதுக்கூட்டம்

28—11—54ல், தோழர் சுதர்சன் தலைமையில் நடைபெற்ற கழகப் பொதுக் கூட்டத்தில், தோழர் ஏ. எஸ். இமயவரம்பன் அவர்கள் 'அரசியலும் சமுதாயமும்' என்ற தலைப்பில், இந்தியப் பேரரசு திராவிடத்தின்பால் காட்டும் ஓரவஞ்சனைகளையும்; அதனுல் திராவிடர் படும் தொல்லைகளையும் விளக்கமாக எடுத்துக்காட்டி, ஏன் திராவிடம் பிரியவேண்டுமென்பதற்கான ஆதாரங்களைச் சுட்டிக்காட்டியும், புராண புளுகுகளையும்,கடவுளின் காம விளையாட்டுகளையும் விளக்கிப் பேசினர்.

சென்னை — பெரியமெட்டு தி. மு. கழகம்

28—11—54 காலை 10-30 மணிக்கு, தோழர் தி. சு. கிள்ளிவளவன் தலைமையில் நடைபெற்ற உறுப்பினர் கூட்டத்தில், தோழர் ஏ. கணேசன் செயலாளராகவும், தோழர் ஆ. வீரன் துணைச் செயலாளராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

ஜமால்பூர்—ஆமதாபாத் தி. மு. கழகம்

28—11—54 மாலை 5 மணிக்கு, தோழர் இரா. வைத்திலிங்கம் இல்லத்தில் தோழர் ந. முனிசாமி தலைமையில் நடைபெற்ற கழகப் பொதுக் கூட்டத்தில், பொங்கல் விழாவைச் சிறப்பாக நடத்துவதென்று முடிவு செய்து, விழாப் பொதுக் கூட்ட நிர்வாகிகளும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்: தலைவர்: சுந்தரம்; வரவேற்பாளர்: இரா. குமார்; வரவேற்புக்குக் குழு தலைவர்: அ. கந்தசாமி; செயலாளர்: சு. பாபு; பெருளாளர்: இரா. நடராசன். பின்னர், கடந்த ஆண்டு விழா வரவு—செலவு கணக்குகள் சரி பார்க்கப்பட்டு ஒப்புக்கொள்ளப்பட்டது.

பம்பாய்—மாதுங்கா தி. மு. கழகம்

28—11—54ல் தோழர் பொ. தர்மராசன் தலைமையில் நடைபெற்ற கழகச் செயற்குழுக் கூட்டத்தில், ஆண்டு விழா வரவு—செலவு கணக்குகள் சரிபார்த்து ஒப்புக் கொள்ளப்பட்டது.

“கலையினைக் கொலை.........”

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

விவாதத்தை ஆரம்பித்து வைத்துப் பேசுகையில் தோழர் ப. ஜீவானந்தம், இந்த மசோதாவின் மூலம் நாடகக் கலையின் வளர்ச்சி பாதிக்கப்படுமென்றும், நாடகங்களுக்கு இந்த மசோதா சாவு மணி அடிப்பது போன்றதாகும் என்றும் குறிப்பிட்டார். இந்த மசோதாவினுல், ஏராளமான முற்போக்கு எழுத்தாளர்களும், அரசியல் வாதிகளும் ஆபத்தில் சிக்க இருக்கிருர்கள் என்று அவர் மேலும் கூறினர்.

“காட்டில் காணப்படும் முன்னேற்றக் கருத்துள்ள கலைகளின் வளர்ச்சியைத் தடை செய்யும் முயற்சிதான் இது,” என்று தோழர் டி. சண்முகம் பேசுகையில் குறிப்பிட்டு, மதுரையில் ஆர். எஸ். எஸ். - காரர்களே கலகம் உண்டாக்கினுர்கள் என்று குறிப்பிட்டார்.

இடையே நிதி அமைச்சர் எழுந்து, மதுரை சம்பவங்கள் நீதி மன்றத்தில் இருப்பதால், அது பற்றி சபையில் பேசவேண்டாம் என்று கேட்டுக் கொண்டார்.

தொடர்ந்து சண்முகம் அவர்கள் பேசுகையில், இதுபோன்ற சட்டங்களைக் கொண்டு வருவதை விட சர்க்கார் சில நாடகங்களை குறிப்பிட்டுத் தடை செய்யலாம் என்றும், எந்த நாடகங்களைப் பார்க்க வேண்டும் என்பதை மக்கள்தான் தீர்மானிக்க வேண்டுமென்றும், ஆகவே, மசோதாவைக் கைவிடுமாறும் கேட்டுக்கொண்டார்.

வி. ஆர். கிருஷ்ணய்யர் பேசுகையில், வகுப்புத் துவேஷத்தையும், பலாத்காரத்தையும் தூண்டும் முறைகளை கட்டுப்படுத்துவது அவசியம் என்ருலும், தற்போதைய மசோதா, அந்த நோக்கத்தையெல்லாம் தாண்டிவிட்டிருக்கிறது என்று குறிப்பிட்டு, “கலையின் குரல் வளையை அறுக்க சர்க்காருக்கு வாள் ஒன்று இதன் மூலம் கொடுக்கப்படுகிறது,” என்ருர்.

“இந்த மசோதா அரசியல் நோக்குடனேயே கொண்டுவரப்படுகிறது என்றும், இதன் மூலம் நூற்றுக் கணக்கான சினிமா நடிகர்கள், நாடகத் தொழிலில் ஈடுபட்டுள்ள ஆயிரக் கணக்கான மக்கள், நாடகம் பார்க்கும் லட்சக் கணக்கான மக்கள் பாதிக்கப்படுவார்கள்,' என்று எதிர்க்கட்சித் தலைவர் இராமமூர்த்தி குறிப்பிட்டார். அவர் பேசுகையில் மேலும் கூறியதாவது :—

“இந்தமசோதாவை வழக்கறிஞர் கோணத்திலிருந்து பார்க்குமாறு அமைச்சர் கூறுகிருர். மக்கள், தங்களின் நலனைப் பாதுகாக்குமாறு அமைச்சரை தேர்ந்தெடுத்திருக்கிருர்களேயன்றி வழக்கறிஞர் கோணத்தில் பிரச்சினைகளை ஆராய அல்ல,' என்ருர். மேலும் அவர் கூறினர்:—

“சர்க்கார் முன்னேற்ற சக்திகளைத் தடை செய்ய முயற்சிக்கிறது. இருபது ஆண்டுகளுக்கு முன்னர், புராண கருத்துக்கள் மக்களின் பாராட்டுதலுக்கு உள்ளாகியிருந்தன; இன்று புராணக் கருத்துள்ள சினிமாக்கள் மடிந்துபோவது ஏன் என்று உறுப்பினர்கள் யோசிக்க வேண்டும். இராஜகோபாலாச்சாரியார், நிதி அமைச்சர் போன்றவர்களின் பிரச்சாரத்திற்குப் பிறகும் அவைகள் மடிந்து போகின்றன; இதன் காரணம் என்ன? ஆஸ்திகத்திற்கும் நாஸ்திகத்திற்கும் இடையேயுள்ள போராட்டம் இன்று துவங்கியது அல்ல. சட்டத்தின் மூலம் கடவுள் நம்பிக்கையை உண்டுபண்ண முடியாது; சட்டத்தின் மூலம் மதத்தைப் பாதுகாக்க முடியாது. மதத்தின்பேரால் மக்களைச்சுரண்டுவோரைப்பாதுகாப்பதே இந்த மசோதாவின் நோக்கம். இந்த மசோதா நிறைவேற்றப்பட்டால் அதன் விளைவு அபாயகரமானதாக இருக்கும். இந்த மசோதாவுக்கு இவ்வளவு அவசரம் தேவையில்லை. நடிகர்களின் கருத்தை அறிய வேண்டும். அஸ்திகர்களானுலும், நாஸ்திகர்கள் ஆனுலும், அவர்கள் சுதந்திரமாக கருத்தைச் சொல்ல அனுமதிக்கப்பட வேண்டும்.”

தோழர் டி. சி. நாராயண நம்பியார் பேசுகையில், “இது மிகவும் தொல்லை தரும் மசோதா என்றும், பாதிக்கப்பட்டவர்கள் நீதிமன்றம் செல்ல அனுமதிப்பது தான் சர்க்காரின் எண்ணமென்ருல், அதற்கு 1876-ம் ஆண்டு சட்டத்தையே திருத்தியிருக்கலாம்” என்றும் குறிப்பிட்டார்.

“தாழ்த்தப்பட்ட மக்கள் நாடகங்களின் மூலம் அறிவு பெறுகின்றனர் என்றும், இந்த மசோதாவின் மூலம் அது தடுக்கப்படுமென்றும், இந்த மசோதா அவசியமில்லை என்றும், மசோதாவை காலவரையின்றி ஒத்திவைக்கவேண்டு”மென்றும் தோழர் ஏ. ரத்தினம் கூறினர்.

“தமிழ் நாட்டின் நாடகக் கலைக்கு இது முடிவு கட்டுவதாகும்,” என்று கே டி. ராஜூ குறிப்பிட்டார்.

“நமது ராஜ்யத்தின் முன்னேற்றக் கருத்துக்களுக்கு இந்த மசோதா சாவுமணியடிப்பதாகும்; ஆகவே இந்த மசோதாவைக் கைவிடவேண்டும்,” என்று என். ரத்தினம் கேட்டுக் கொண்டார்.

“தனிக் குழுவினர், மசோதாவின் விதிகளை நன்கு பரிசிலனை செய்யவேண்டும்,” என்று டி தெய்வசிகாமணி கேட்டுக்கொண்டார்.

தோழர் ஏ. கோவிந்தசாமி பேசுகையில், “அமைச்சர்கள் பகுத்தறிவுப் பிரச்சாரத்திற்கு எதிராக இருக்கிருர்கள்,” என்ருர்.

“இராதாவின் ‘இரத்தக் கண்ணீர்’ நாடகத்தை ஓமந்தூர் ராமசாமி ரெட்டியார், நீதிபதி சோமசுந்தரம் ஆகியோர் பார்த்து பாராட்டியிருக்கிருர்கள்; அவர்கள் கண்களுக்குத் தென்படாத ஆட்சேபணை இந்த ஆட்சியாளர்களுக்குத் தென்பட்டுவிட்டதா?” என்று அவர் கேட்டார்.

“இந்த சட்டத்திற்கு அவசியமே இல்லை; புராண நாடகங்களே நாட்டில் நடிக்கப்பட வேண்டுமென்று சர்க்கார் சட்டமியற்றட்டுமே,” என்று அவர் கூறினர்.

“உண்மையிலேயே கேட்கிறேன்—மந்திரிகளில் எத்தனை பேருக்கு கடவுள் நம்பிக்கை இருக்கிறது? மந்திரி சுப்பிரமணியத்திற்கு தெய்வ நம்பிக்கையிருக்கிறதா? ‘நீறில்லா நெற்றி பாழ்’ என்று பாடப்பட்டுள்ளது; ஆனுல் மந்திரியின் நெற்றியில் ஒன்றும் இல்லையே! இன்று நாட்டில், நாம ஆராய்ச்சிதான் நடைபெறுகிறது; அதுவும், ‘ஆண்டவன் நாமம் வடகலையா, தென்கலையா,’ என்ற ஆராய்ச்சி தான் நடக்கிறது.

“நவாப் ராஜமாணிக்கத்தின் நாடகங்களில் பலவற்றிக்கு சுப்பிரமணியம் தலைமை வகித்திருக்கிருர்; இன்று ராயப்பேட்டையில் நடக்கும், ‘இன்பக் கனவு’ நாடகத்திற்கு மந்திரி சுப்பிரமணியம் போய்ப் பார்க்கவேண்டும்.

“காமராசர் ஆட்சியில் நிம்மதியும் அமைதியும் நிலவுகிறது; அந்த ஆட்சிக்கும், அமைதிக்கும் ஆபத்து ஏற்படுத்துவதற்கான சூழ்ச்சிதான் இது. நிதி மந்திரி தொடர்ந்து நிதி மந்திரியாக இருக்க வேண்டுமென்ருல் உடனடியாக இச்சட்டத்தைக் கைவிட வேண்டுகிறேன்”

தோழர் கே. பி. மேனன் பேசுகையில், “நாடக மசோதா மீது காங்கிரஸ் உறுப்பினர்கள் ஒருவரும் பேசவில்லை; ஏன், இந்த மவுனம்? ஏதோ காரணத்திற்காகத்தான் அவர்கள் மவுனம் சாதிக்கிருர்கள்,” என்ருர்.

தோழர் எம். பி. சுப்பிரமணியம் பேசுகையில், “இந்த மசோதா விளக்கமற்று இருக்கிறதென்றும், இந்த மசோதாவை சர்க்கார் வாபஸ் பெறவேண்டு”மென்றும் கூறினர்.

தோழர்கள் டி. கே. சண்முகம், எம். ஜி. இராமச்சந்திரன், எஸ். வி. சகஸ்ரநாமம், சிவாஜி கணேசன் ஆகியோரும், மற்றும் பல நடிகர்களும் பார்வையாளர் பகுதியில் இருந்து சபை நடவடிக்கைகளை கவனித்தனர்.

மதுரை மாநாடு

மதுரை மாவட்ட தி. மு. கழக மாநாட்டின் வரவேற்புக் குழு கூட்டம் 4—12—54 மாலை 6-30 மணிக்கு, மதுரை நகரிலுள்ள மாவட்ட மாநாட்டு அலுவலகத்தில் தோழர் என். வி. நடராசன் முன்னிலையில் நடைபெற்றது. வரவேற்புத் தலைவர் தோழர் தொந்தி தலைமை வகித்தார். மாவட்டத்தின் பல பாகங்களிலிருந்தும் 45 உறுப்பினர்கள் வந்திருந்தனர்.

தோழர் என். வி. என். கூட்டத் துவக்கத்தில் உறுப்பினர்களுக்கு மாநாட்டின் நிலை குறித்து விளக்கிப் பேசினுர். மற்ற உறுப்பினர்கள் தங்கள் தங்கள் கருத்தைத் தெரிவித்தனர்.

இறுதியாக கீழ்க்கண்ட முடிவுகள் ஒரே மனதாகச் செய்யப்பட்டன :—

1. மாநாட்டை ஜனவரி 8, 9-ந் தேதிகளில் மதுரையில் நடத்துவது.

2. வரவேற்புத் தலைவர்—பொருளாளர் : தொந்தி ; செயலாளர்கள் : எஸ். முத்து, அய்யாச்சாமி ; தொண்டர் படைத் தலைவர்கள் : சேது, வேலு, எஸ் எஸ் ராஜேந்திரன் ஆகிய இந்த நிர்வாகிகளை ஒரேமனதாக ஏற்றுக்கொள்வது. மாவட்ட கமிட்டி உறுப்பினர்கள் வரவேற்புக் குழு உறுப்பினர்களாக இருப்பதென முடிவு செய்யப்பட்டது.

3. வரவேற்புக் குழுவிலிருந்து இராஜினுமா செய்தவர்களின் விலகுதல் கடிதத்தை குழு ஏற்றுக் கொண்டது.

சமூக சீர்திருத்த மாநாடு

தலைவர் : சத்தியவாணி முத்து

திறப்பாளர் : தில்லை-வில்லாளன்

அரசியல் மாநாடு

தலைவர் : மு. கருணாநிதி

திறப்பாளர் : ஆத்தூர்-சுப்பிரமணியம், எம்.எல்.ஏ

இருநாட்களிலும் எம். ஜி. ஆர். குழுவினர், எஸ். எஸ். ராஜேந்திரன் குழுவினர் நாடகம் உண்டு.

மாநாட்டு அலுவலகம் இனி நகர கழகத்திலேயே வைத்துக் கொள்வதென்றும் முடிவு செய்யப்பட்டது.

தோழர் என். வி. என். மீண்டும் அனைவருக்கும் வேண்டுகோள் விடுத்துப் பேசினுர்.

மாநாட்டுச் செயலாளர் அய்யாசாமி நன்றி கூற இனிது முடிவுற்றது.

ஒலிபரப்பு அபிவிருத்திக்கான ஐந்தாண்டுத் திட்டம் நிறைவேற்றி வைக்கப்படும்போது, அகில இந்திய ரேடியோவின் நடுத்தர அலை ஒலிபரப்புகள் இந்நாட்டு மக்களில் மேலும் 2 கோடி மக்களுக்குப் பயன்படுவதாக இருக்கும்.

★

தூதுக் குழு

தென்இந்திய நடிகர் சங்கத்தின் சார்பில் தோழர்கள் எம். ஜி. இராமச்சந்திரன், டி. கே. சண்முகம், என். எஸ். நாராயண பிள்ளை, எஸ். வி. சகஸ்ரநாமம், சிவாஜி கணேசன் ஆகியோர் சென்னை முதல் அமைச்சர் காமராசரைச் சந்தித்து, நாடக சட்ட மசோதாவைக் கைவிட வேண்டும் என்று கோரி மகஜர் ஒன்று தந்தனர்.

தூதுக் குழுவினரிடம், மசோதாவைப் பரிசீலனை செய்யும் தனிக் குழு முன்னர் சாட்சியம் கூற அவர்களுக்கு சந்தர்ப்பம் அளிப்பதாக காமராசர் பதில் கூறியதாகத் தெரிகிறது.

‘நீரை வடி கட்டும் பொறி அமைப்பில் மோசடி’

‘ஒப்பியுள்ள அமைப்பில் அக்கரை - - உடையவர்களே பொறுப்பாளிகள்’

சென்னைக் குடிநீரைக் குதிரைகள்தான் குடிக்குமாம்!

சென்னை, டிச. 6—

“சென்னைக்குத் தரப்படும் குடி நீரை வடிகட்டுவதற்கு ஒரு புதிய முறை சிறந்தது என்று ஒரு பிரிட்டிஷ் நிபுணர் கருத்தறிவித்து சம்மந்தப்பட்ட எஞ்சினியருக்குக் கடிதம் வரைந்திருந்தார்; ஆனுல், அந்தக் கடிதம் எப்படியோ மாயமாய் மறைந்துவிட்டது. இப்போதுள்ள ‘மெக்கானிக்கல்’ வடிகட்டும் சாதனங்கள் விற்பனையில் ஈடுபட்டுள்ள ஒரு வர்த்தகக் கம்பெனிதான் இதற்குக் காரணமாகும்.”

—என்று, டாக்டர் ஏ சீனிவாசன் சென்னை மேல் சபையில் பேசுகையில் குற்றம் சாட்டினுர்.

மேலும் அவர் சொன்னுர் :— “சென்னையில்விநியோகிக்கப்படும் குடிநீரை வடிகட்டுவதற்கு ‘மெகானிக்கல்’ வடிகட்டும் சாதனங்களை அவசர அவசரமாகப் பொருத்துவதை நான் கண்டிக்கிறேன். தண்ணீர் வடிகட்டுவதற்கு வேறு பல முறைகளும் உள்ளன. அவைகளில் ‘மைக்ரோ மெஷ்’ முறை சிக்கனமானதும், பலனுள்ளதும் ஆகும்”

இச்சமயத்தில் சபைத் தலைவர் டாக்டர் பி. வி. செரியன் குறுக்கிட்டு, “நான் கருத்தறிவிக்கக் கூடாதென்ருலும், ஒன்று கூற விரும்புகிறேன்; சென்னை குடிநீர் திட்டத்திற்கு ‘மைக்ரோ மெஷ்’ வடிகட்டும் முறை சிறந்ததல்ல,” என்று கூறினுர்.

தொடர்ந்து பேசிய டாக்டர் சீனிவாசன், “நீர் வடிகட்டும் முறைகளில் கருத்து வேறுபாடுகள் இருக்கத்தான் செய்கிறது; ஆனுல் ‘மைக்ரோமெஷ்’ முறை சென்னை குடிநீர் விநியோக திட்டத்திற்குச் சிறந்தது, பொருத்தமானதுதான் என்று பிரிட்டிஷ் நிபுணர் கருத்தறிவித்திருக்கிருர் என்பது எனக்கு ஆதாரபூர்வமாகத் தெரியும். ஆனுல், அவர் எழுதிய கடிதம் மாயமாய் மறைந்துவிட்டது எப்படியோ?” என்று கூறினுர்.

மேலும் அவர் “இப்போது சென்னை நகரில் கிடைக்கும் தண்ணீரை குதிரைகூடக் குடிக்காது” என்று குறை கூறினுர்.

உடனே டாக்டர் ஜான் “அப்படியானுல், நாமெல்லோரும் குதிரைகளா?” என்று கேட்டார்.

அதற்கு டாக்டர் சீனிவாசன், “சில மனிதக் குதிரைகளும் இருக்கத்தான் செய்கின்றன,” என்று பதில் கூறியபோது சபையில் சிரிப்பொலி கிளம்பிற்று.

சென்னை சட்டசபையில்....

★

நம்புகிருர்கள்?

வேலை சந்தர்ப்பங்களைப் பெருக்கவும், மின்சார வசதிகளை அதிகரிக்கவும், ரூ. 447.22 லட்சம் பெறுமான எட்டுத் திட்டங்களை, மத்திய திட்டக் குழுவிற்கு சென்னை சர்க்கார் அனுப்பியுள்ளது என்றும் இதற்கு உதவி செய்வதாக இந்திய சர்க்கார் வாக்குறுதி எதையும் அளிக்கவில்லை என்ருலும், பூராத் தொகையையும், கடனாக இந்திய சர்க்கார் தரலாமென நம்பப்படுகிறது என்றும், மராமத்து இலாகா மந்திரி இராமநாதபுரம் ராஜா, தோழர் ரங்கசாமியின் கேள்வியொன்றுக்குப் பதிலளிக்கையில் தெரிவித்துள்ளார்.

மந்திரியின் வேலையாட்கள்

“மாநில அரசாங்க மந்திரிகள் வேலையாட்கள் வைத்துக்கொள்வது பற்றி மத்திய ‘சர்க்காரிடமிருந்து ஏதேனும் தாக்குதல் வந்ததா?” என்ற கேள்விக்கு, ‘இல்லை’ என்று மந்திரி சுப்ரமணியம் பதிலளிக்கையில் கூறினுர். இதற்கு முன்பு வேறொரு கேள்விக்கு பதிலளிக்கையில், “மந்திரிகளுக்கு அலுவலகத்தில் இரண்டு வேலையாட்களும், வீட்டில், மாறி மாறி வேலை செய்ய மூன்று பேர்களும் இருப்பார்கள்” என்று மந்திரியார் தெரிவித்தார்.

ஆசிரியர்களின் சம்பளம்

மாவட்ட நாட்டாண்மைக் கழக இடைக்கல்வி நிலையங்கள் 130-ம், சர்க்கார் உதவியுடன் தனிப்பட்டோர் நடத்தும் பள்ளிகள் 248-ம் சர்க்கார் நிர்ணயித்துள்ள சம்பள விகிதப்படி ஆசிரியர்களுக்கு சம்பளம் தரவில்லை என்று நிதி மந்திரி சுப்பிரமணியம் தெரிவித்தார்.

மாவட்டக் கழக இடைநிலைப் பள்ளிகளுக்கு ரூ. 8,31,600-ம், தனிப்பட்டோர் பள்ளிகளுக்கு 26,43,300 ரூபாயும் மானியமாகத் தருவதாகவும் அவர் கூறினுர்.

சர்க்கார் நிர்ணயித்துள்ள அளவு சம்பளம் தருவதற்குக் கட்டாது என்பதாலேயே அவர்கள் அப்படி சம்பளம் தரவில்லை என்றும் அவர் அறிவித்துள்ளார்.

இப்பள்ளிகளுக்கு சர்க்கார் மானியம் தர வேண்டுமென்ற கட்டாயமுண்டா என்று கேட்டபோது எந்த சம்பளத்தையேனும் இஷ்டப்படி அனுமதித்துள்ளபடியால் சர்க்கார் மானிய உதவி செய்ய வேண்டியவர்களாயுள்ளனர் என்றும் அவர் தெரிவித்தார்.

மாவட்டக் கழகத் தேர்தலும் புதிய வாக்குப் பதிவு முறையும்

அண்மையில் நடைபெற்ற மாவட்டக் கழகங்களுக்கான தேர்தலில் மொத்தம் பதிவான வாக்குகள் 64 லட்சத்தில் 5½ லட்சம் வாக்குகள் செல்லாதவையாகிவிட்டனவென்றும், இது மொத்த வாக்குப் பதிவில் 8.6 சதவிகிதமென்றும் தகவல் தரப்பட்டது.

புதிய வாக்குப் பதிவு முறையை மீண்டும் சர்க்கார் பரிசீலிப்பதாகவும், தேவையானுல், சர்க்கார், புதிய வாக்குப் பதிவு முறையை மாற்றிவிடவும் தயாராயிருப்பதாகவும் கூறப்பட்டது.

தொடரும்!

சென்னை மாநிலத்தில் மின்சாரம் உபயோகிப்போரிடமிருந்து அதிகக் கட்டணமாக 20 சதவிகிதம் ‘சர்சார்ஜ்’ வசூலிப்பது இன்னும் சில காலம் தொடர்ந்து இருக்குமென்றும், யுத்தம் முடிந்துவிட்டாலும், யுத்தத்தால் ஏற்பட்ட நிலைகள் இன்னும் இருப்பதாயும், மின்சார உற்பத்திச் செலவை ஈடு செய்ய ‘சர்சார்ஜ்’ விதிப்பது அத்தியாவசியமாகிறதென்றும், கேள்விகளுக்குப் பதிலளிக்கையில் மந்திரி இராமநாதபுரம் ராஜா தெரிவித்துள்ளார்.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம்.ஏ., அவர்களால், அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று (24, சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம் சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர் : சி. என் அண்ணாதுரை, எம் ஏ